# <u>மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம்,அன்னூர்.</u>
## <u>O.S.No. 347 / 2023</u>

2026 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள், செவ்வாய்க்கிழமை 24–ம் நாள் திரு. சதீஸ்குமார் என்பவரது சாட்சிய வாக்குமூலம் (1873 ம் ஆண்டு 10 வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திருமதி. வெ.மோனிகா, பி.ஏ.,பி.எல்.,எல்.எல்.எம்., மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிபதி, அன்னூர் என்பவரால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சதீஸ்குமார் | வயது | 36 |
| த.பெ. | தர்மராஜ் | தாலூக்கா | கோவை வடக்கு |
| கிராமம் | பெரியநாயக்கன்பாளையம் | மாவட்டம் | கோவை |
| தேதி | 24.02.2026 | PW – 2 | |

<u>வாதி தரப்பில் முதல் விசாரணை</u>

1. எனக்கு சாட்சி சொல்ல நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை வந்தது என்றால் சரிதான். அந்த அழைப்பாணையில் சொல்லப்பட்டுள்ள ஆவணங்களை நான் நீதிமன்றத்திற்கு கொண்டு வந்துள்ளேன். என்னென்ன ஆவணங்கள் கொண்டு வந்துள்ளேன் என்றால் மசக்கவுண்டன்செட்டிபாளையம் கிரமத்தின் க.ச.எண். 700 ற்கான புல வரைபடம் மற்றும் அதன் நிலஉடைமை மேம்பாட்டு திட்டத்தின் கீழான "அ–பதிவேடு" ஆகியவற்றின் சான்று நகல்கள் கொண்டு வந்துள்ளேன்.

2. நான் கொண்டு வந்துள்ள க.ச.எண். 700 ன் அ–பதிவேடு வண்டிப்பாதை என்று வகைப்பாடு செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். (**க.ச.எண். 700 ற்கான அ–பதிவேடு Ex.X1 ஆக குறியீடு <u>செய்யப்படுகிறது</u>.**) அதில் குறிப்பாக 'அரசு புறம்போக்கு வண்டிப்பாதை' என்று வகைப்பாடு செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். அந்த தடம் கிழமேல் வண்டிப்பாதை என்றால் சரிதான். அந்த வண்டிப்பாதை மேற்கில் இருந்து தொடங்குகிறது என்றால் சரிதான். நான் கொண்டு வந்துள்ள புல வரைபடம் மற்றும் அ–பதிவேடு தான் அரசாங்கத்தின் வருவாய் துறையில் பராமரிக்கப்பட்டு வரும் அங்கீகாரம் பெற்ற பதிவுகள் என்றால் சரிதான்.

3. நான் கொண்டு வந்துள்ள க.ச.எண். 700 ன் புல வரைபடத்தில் க.ச.எண். 700/2 ன் ஆரம்ப பகுதியான மேற்கு பகுதியின் அகலம் 7.2 மீட்டர் என்று சொன்னால் சரிதான். (**க.ச.எண். 700 ற்கான புல வரைபடம் Ex.X2 ஆக குறியீடு <u>செய்யப்படுகிறது</u>**) அதை தொடர்ந்து 2 ம் எண் புள்ளியில் சாய்வாக 21.6 மீட்டரில் உள்ளது. அங்கிருந்து கிழக்கே சென்று பாதை தெற்கே திரும்புகிறது. அவ்வாறு திரும்பும் இடத்தில் அகலம் என்ன

என்றால் அங்கு அளவுகள் எங்கள் பதிவுகளில் குறிப்பிட்டிருக்கவில்லை. நாங்கள் அந்த பாதையின் அகலத்தினை எவ்வாறு கணக்கெடுப்போம் என்றால் நிலவியல் அளவு செய்து தான் எடுக்க முடியாது. ஏற்கனவே எடுத்த நில அளவையின் அடிப்படையிலான குறிப்புகள் இருக்குமா என்றால் இருக்கும். கிழக்கில் இருந்து தெற்கே திரும்பும் இடத்தில் அந்த பாதையின் அகலம் தோராயமாக என்ன இருக்கும் என்றால் சுமார் 6.1 மீட்டர் இருக்கும். அவ்வாறு நான் கூறும் 6.1 மீட்டர் என்ற அளவை என்பது எதை பொருத்து நான் சொல்கிறேன் என்றால் தற்போது Webcolland என்ற திட்டத்தின் கீழ் தமிழ்நாடு அரசு மேற்கொண்டு வரும் Digitized survey ன் அடிப்படையில் தயாரிக்கப்பட்ட க.ச.எண். 700 ன் புல வரைபடத்தின் அடிப்படையில் கூறுகிறேன். (**அந்த க.ச.எண். 700 ற்கான Digitized FMB Ex.X3 ஆக குறியீடு செய்யப்படுகிறது**)

4. வண்டித்தடம் தெற்கே திரும்பிய பின் தெற்காக சென்று கிழக்காக தென்கிழக்கில் சாய்வாக செல்கிறது. அவ்வாறு தென்கிழக்காக செல்லும் பகுதியின் அகலம் என்ன என்றால் அந்த அகலம் குறிப்பிட்டிருக்காது. ஆரம்ப மற்றும் முடிவு புள்ளிகளில் தான் அகலம் குறிப்பிட்டிருக்கும். கிழக்கோட்டு பகுதியின் முடிவு பகுதியில் அந்த வண்டிப்பாதையின் அகலம் என்னவென்றால் 13.2 மீட்டர். நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள Ex.X1 ல் க.ச.எண். 700/1B என்பது நிபந்தனையின் அடிப்படையில் கொடுக்கப்பட்டுள்ள பட்டா என்றால் சரிதான். புல வரைபடத்தில் க.ச.எண். 700/5 என்பது என்ன வகைப்பாடு செய்யப்பட்டுள்ளது என்றால் அது பட்டா பூமி. க.ச.எண். 700/3C என்பது அரசு புறம்போக்கு சாலை என்று வகைப்பாடு செய்யப்பட்டுள்ளது. Ex.X3 ல் க.ச.எண். 700/1A ல் ஒரு மத்திய பகுதியின் அளவாக 10.9 மீட்டர் அகலம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான்,

<u>பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>

க.ச.எண். 700/5, 700/3C மற்றும் 700/1B ஆகிய காலைகளை பொருத்து எனக்கு சாட்சியமளிக்க வந்துள்ள அழைப்பாணையில் குறிப்பிடாத போது அதை பொருத்து சாட்சியமளிக்க எனக்கு உரிமையில்லை என்று சொன்னால் சரியல்ல.

Take down by me/before me in open Court, interpreted/read over to the Witness and admitted by the deponent to be correct.

S/d.V.Monika
District Munsif Cum Judicial Magistrate
Annur